முகம்
(மாத இதழ்)

திருவள்ளுவர் ஆண்டு 2055
சித்திரை - 18 (01.05.2024)

நிறுவனர்
**மாமணி**

ஆசிரியர்:
**முனைவர் இளமாறன்**
94442 64111
044 - 4557 9006


தனி இதழ் ரூ.15/-
ஆண்டுக் கட்டணம் ரூ.150/-
10 ஆண்டுக்கு ரூ.1000/-

விளம்பரக் கட்டணம்
முழுப்பக்கம்

உள்ளே ரூ.1000/-
வெளியே ரூ.2000/-

**முகம்** என்னும் பெயரில்
காசோலை அனுப்பலாம்

**முகம் தொடர்பு முகவரி:**
எண்.26, பாரதிதாசன் தெரு, திருநகர்,
சாபர்கான்பேட்டை, சென்னை– 600 083.



மெய்ப்பொருள் காண்பது அறிவு
–குறள்

இணையதளம்: http://www.mugamidhazh.net.in
மின்னஞ்சல்: mugam.idhazh@gmail.com

# பொதுநெறி புதைகுழிக்குள்!

**நா**டாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அடுத்த மாதம் 4ஆம் தேதிதான் வெளியாகும் என்று நினைத்திருந்த நிலையில், குறுக்கே பா.ச.க.வின் தேர்தல் முடிவு ஒன்று வெளியாகி இருக்கிறது.

குஜராத் மாநிலம் சூரத் தொகுதி பா.ச.க. வேட்பாளர் முகேஷ் தவால் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. குஜராத்தில் மொத்தமுள்ள 26 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் இம்மாதம் 7ஆம் தேதிதான் தேர்தல் நடைபெற உள்ளது. அதற்குள், ஒரே ஒரு வாக்குக் கூடப் பதிவாகாத போதும் இந்த வெற்றி அறிவிக்கப்பட்டிருக் கிறது.

சூரத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் நிலேஷ் கும்பணி வேட்பு மனு அளித்திருந்தார். கட்சியின் மாற்று வேட்பாளராக சுரேஷ் பட்சலா வேட்பு மனு அளித் திருந்தார். இவர்களைத் தவிர, பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் பியரிலால் பாரதி மன்றும் சிறிய கட்சிகளைச் சேர்ந்த 3 வேட்பாளர்கள், 4 சுயேட்சை வேட்பாளர்கள் வேட்பு மனுக்கள் அளித்திருந் தனர்.

இதில் காங்கிரஸ் வேட்பாளர் நிலேஷ் கும்பணியை முன்

மொழிந்தவர்களின் கையெழுத்தில் முரண்பாடுகள் இருந்ததாகக் கூறப் பட்டு அவரது வேட்புமனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இதைப்போல் காங்கிரஸ் கட்சியின் மாற்று வேட்பாளர் மனுவும் செல்லாது என அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆக, காங்கிரசின் இரு வேட்பாளர் மனுக்களும் தள்ளப்பட்டுவிட்டன.

பகுன்சமாஜ் வேட்பாளர், சிறிய கட்சிகளைச் சேர்ந்த 3 வேட்பாளர்கள் மற்றும் 4 சுயேட்சை வேட்பாளர்கள் தங்கள் மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டு, மீதமுள்ள ஒரே ஒரு பா.ச.க. வேட்பாளர் முகேஷ் தலால் போட்டி யின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கதையைக் கேட்கும் போது, அல்லது படிக்கும் போது இந்தியத் தேர்தல் ஆணையம் இவ்வளவு கேவலமாகிவிட்டதே என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை. இது திட்டமிட்டு உருவாக்கப்பட்ட வெற்றி என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட ஒரு தேர்தல் தேவையா, இதற்கு ஒரு தேர்தல் ஆணையம் தேவையா?

3 சிறிய கட்சி வேட்பாளர் களும், 4 சுயேட்சைகளும் வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றதற்கான காரணம் எதுவாக இருக்கும்? திரும்பப் பெறும் எண்ணம் இருப்பவர்கள் ஏன் தேர்தலில் போட்டியிட வேண்டும்?

இன்றைய சூழலில் ஆட்சிக் கவிழ்ப்பு இயலாததாகிவிட்டதால், வெற்றி பெற்றபின் அவர்களை நல்ல விலைக்கு வாங்கித் தம் கட்சியை வலுப்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றும் கலையின் வல்லுநர் கள் நடத்தும் களியாட்டம் இது எனலாம். தேர்தல் முடிவுகள் வருவதற்கு முன்னரே இப்படிப்பட்ட சூழ்ச்சிகளால் சாதிக்கின்றனர் என்றால், தேர்தல் முடிவுகள் வந்தபின் என்னென்னவெல்லாம் நடக்கும் எனத் தெரியவில்லை.

கடந்த காலங்களில் கோவா, மகாராட்டிரா, கருநாடகா, பீகார், உத்தரகாண்ட், புதுவை மாநிலங் களில் நடைபெற்ற ஆட்சி மாற்றங் களின் வரிசையில் சூரத் தொகுதி பா.ச.க. வெற்றி அறிவிப்பும் சேர்த்துக் கொள்ளலாம். 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் பழமொழி இன்றும் புதுமொழியாக இருக்கிறது போலும்.

இப்படிப்பட்ட செய்திகள் உலக நாடுகளுக்கிடையே இந்தியாவுக்கு அவமானத்தை ஏற்படுத்தாதா? உலக நாடுகள் இந்தியாவைப் பார்த்துச் சிரிக்காதா?

இந்த இழிவுகளைப் பற்றி யெல்லாம் கவலைப்படாமல், எப்படியும் ஆளலாம் என நினைப் போரின் ஆளுகையில் பொதுநெறி புதைகுழிக்குள்தான் செல்லும்.

**- ஆசிரியர் (24.4.2024)**